பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

10 05 2025 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

## <u>தலைப்புச் செய்திகள்</u>

1. பதற்றத்தை அதிகரிக்கும் நோக்கில் பாகிஸ்தான் பொறுப்பற்ற முறையில் தாக்குதல் நடத்தி வருவதாகவும், அதற்கு உரிய பதிலடி கொடுக்கப்பட்டு வருவதாகவும் இந்தியா கூறியுள்ளது.

2. இந்தியா கொடுத்த பதிலடியில் பாகிஸ்தான் ராணுவ கட்டமைப்புகளுக்கு பெரிய அளவில் சேதம் ஏற்பட்டிருப்பதாக விங் கமாண்டர் வியோமிகா சிங் தெரிவித்துள்ளார்.

3. இந்தியாவின் வான் பாதுகாப்பு கட்டமைப்பான **S-400** –ஐ அழித்ததாக பாகிஸ்தான் கூறியுள்ளது பொய்யான செய்தி என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடி தொடர் ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறார்.

5. உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் --*</u>

**<<<<<<<>>>>>**

பதற்றத்தை அதிகரிக்கும் வகையில் பாகிஸ்தான் பொறுப்பற்ற முறையில் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும், அதற்கு உரிய பதிலடி கொடுக்கப்பட்டு வருவதாகவும் இந்தியா கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி, கர்னல் சோபியா குரேஷி, விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை தெரிவித்தனர்.

வழக்கம்போல், தாக்குதல் தொடர்பான பல்வேறு பொய் செய்திகளையும் பாகிஸ்தான் பரப்பி வருவதாக திரு விக்ரம் மிஸ்ரி குற்றம் சாட்டினார்.

இந்தியாவின் வான் பாதுகாப்பு கட்டமைப்பான **S-400**–ஐ அழித்ததாக பாகிஸ்தான் கூறியுள்ளது பொய்யான செய்தி என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய விமானப்படை தளத்தை தாக்கியதாக பாகிஸ்தான் கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் அவர் கூறினார்.

இதேபோல், இணைய தாக்குதல் மூலம் மின் கட்டமைப்பை செயலிழக்கச் செய்ததாக பாகிஸ்தான் வெளியிட்ட செய்தியும் பொய்யானது என்று திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

இந்தியா செலுத்திய ஏவுகணை ஆப்கானிஸ்தானை தாக்கியதாக பாகிஸ்தான் வெளியிட்டுள்ள செய்தியும் பொய்யானது என்று அவர் தெரிவித்தார்.

மக்களை தாக்கும் வகையில் செயல்படுவது எந்த நாடு என்பது ஆப்கானிஸ்தானுக்கு நன்றாக தெரியும் என்றும் திரு விக்ரம் மிஸ்ரி கூறினார்.

பாகிஸ்தான் கோழைத்தனமாக குடியிருப்பு பகுதிகளையும் பள்ளிகளையும், கோவில்களையும் குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக விங் கமாண்டர் வியோமிகா சிங் கூறினார்.

26 நகரப்பகுதிகளை குறிவைத்து வான்வழி தாக்குதலை பாகிஸ்தான நடத்தியதாகவும், அவை அனைத்தும் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பஞ்சாபில் உள்ள விமானப்படை தளத்தை குறிவைத்து அதிவேக ஏவுகணையை பாகிஸ்தான் செலுத்தியதாகவும், அந்த ஏவுகணையும் அழிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இந்திய விமானப்படை தளங்கள் பாதுகாப்பாக இருப்பதாக கூறிய விங் கமாண்டர் வியோமிகா சிங், அதுதொடர்பாக இன்று எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் வெளியிட்டார்.

இதற்கிடையே, பாகிஸ்தான் ட்ரோன்களை ஏவுவதற்காக பயன்படுத்திய தளத்தை இந்திய ராணுவம் தாக்கி அழித்துள்ளது.

பாகிஸ்தானின் **Rafiqui, Murid, Chaklala, Rahimyar Khan** ஆகிய விமான தளங்களை குறிவைத்தும் இந்தியா தாக்குதலை நடத்தியுள்ளது.

போர் விமானங்கள் மற்றும் வான்வழி ஆயுதங்களை பயன்படுத்தி, இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு பகுதியில் உள்ள எல்லை பாதுகாப்புப்படைகளின் நிலைகளை குறிவைத்து பாகிஸ்தான் தாக்குதலை நடத்தியதாகவும், இதற்கு இந்திய ராணுவம் உரிய பதிலடி கொடுத்தாகவும், இதில் பாகிஸ்தான் பாதுகாப்பு கட்டமைப்புகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாக எல்லை பாதுகாப்புப்படை கூறியுள்ளது.

பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் ராஜோரி, பூஞ்ச் மாவட்டங்களை சேர்ந்த அரசு அதிகாரி உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர்.

இதற்கிடையே, ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக பிரதமர் திரு நரேந்திர மோடி, தொடர்ந்து ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறார்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் உட்பட பலர் இந்த தொடர் ஆலோசனைகளில் பங்கேற்றுள்ளனர்.

இந்தியா நடத்திவரும் பதிலடி தாக்குதல்களையும் பிரதமர் நேரடியாக கண்காணித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில், அமெரிக்க வெளியறவுத்துறை அமைச்சர் திரு **Marco Rubio,** வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கரை தொலைபேசியில் இன்று தொடர்புகொண்டு பேசினார்

பதற்றத்தை தணிக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உதவ அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் திரு **Marco Rubio** கூறினார்.

இந்நிலையில், ஜி.7 நாடுகள் அமைப்பும் பதற்றத்தை தணிக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்தியாவையும், பாகிஸ்தானையும் வலியுறுத்தியுள்ளன.

இருநாடுகளுக்கும் இடையே பதற்றத்தை தணிக்க முயற்சி மேற்கொண்டு வருவதாக சவுதி அரேபியா கூறியுள்ளது.

பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்று அந்நாட்டு வெளியுறவுத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**<<<<<<<>>>>>**

பாகிஸ்தான் உடனான பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், பல்வேறு மாநில அரசுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனை கூட்டத்தை மேற்கொண்டு வருகின்றன.

மகாராஷ்ட்ராவில் கடற்படை அதிகாரிகள் மற்றும் அரசு அதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் மும்பையில் நடைபெற்றது.

இதனையடுத்து, அம்மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், **Palghar** கடல் பகுதியில் மீனவர்கள் கூடுதல் கண்காணிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒடிஷாவில் அரசு ஊழியர்களின் விடுமுறை ரத்து செய்யப்படுவதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விடுமுறைகளுக்கும் இது பொருந்தும் என்று அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

விடுமுறையில் இருக்கும் மாவட்ட ஆட்சியர்கள், வருவாய் அலுவலர்கள் அனைவரும் உடனடியாக பணிக்கு திரும்புமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பஞ்சாபில் ட்ரோன்களை அழிப்பதற்கான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

எல்லைப்பகுதியில் உள்ள ஆறு மாவட்டங்களில் இந்த கட்டமைப்பு நிறுவப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மாநிலத்தில் பொதுமக்களை பாதுகாப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முதலமைச்சர் திரு பகவந்த் சிங் மான் கூறியுள்ளார்.

எல்லைப்பகுதியையொட்டிய மாவட்டங்களில் அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கண்காணித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

குஜராத்திலும் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அம்மாநில முதலமைச்சர் திரு புபேந்திர பாட்டீல் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, நடைபெற்ற உயர்நிலைக்குழு கூட்டத்திற்கு தலைமை வகித்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

எல்லைப்பகுதியையொட்டிய மாவட்டங்களில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**<<<<<<<>>>>>**

தீவிரவாதத்தின் மையமாக பாகிஸ்தான் இருக்கிறது என்பதை உலகம் அறிந்திருப்பதாக ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரி லெப்டினன்ட் ஜென்ரல் **‘Satish Dua ’** கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், தீவிரவாதத்துக்கு ஆதரவு தெரிவித்துவரும் பாகிஸ்தானுக்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் இந்தியா சரியான பதிலடி கொடுத்திருப்பதாக கூறினார்.

பாகிஸ்தானைவிட நம் படையினர் பல மடங்கு திறன் மிக்கவர்கள் என்பது தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் லெப்டினன்ட் ஜென்ரல் **‘Satish Dua ’** தெரிவித்தார்.

**<<<<<<<>>>>>**

உலக அமைதிக்காக தமிழகத்தை சேர்ந்த மாணவர்கள் 85 ஆயிரம் காகிதப் புறக்களை செய்து சாதனை படைத்துள்ளனர்.

சேலம் அரசு பொறியியல் கல்லூரி கலைக்கழகம் சார்பில் மாணவர்கள் இந்த சாதனையை படைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - விஜய்குமார் - 35 செகண்ட்ஸ்)*

**<<<<<<<>>>>>**

உலக கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஷாங்காயில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் குழுப் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியா 232 – 228 என்ற புள்ளிக்கணக்கில் மெக்ஸிகோவை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

இந்தியா மகளிர் குழுப் பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும், கலப்புக் குழு பிரிவில் வெண்கலப்பதக்கத்தையும் வென்றது.

------------

உலக ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Veer Chotrani, Abhay Singh, Ramit Tandon** மற்றும் **Anahat Singh** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

அமெரிக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில், அபெய் சிங், சுவிட்சர்லாந்தின் **Nicolas Muller-**ஐயும், **Veer Chotrani** இங்கிலாந்தின் **Declan James-** ஐயும், **Ramit Tandon** ஜப்பானின் **Ryunosuke Tsukue-** யையும் வென்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Anahat Singh** அமெரிக்காவின் **Marnia Stefanoni**–யை வென்றார்.

------------

சீனாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்தும், ஈரானில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் கரண் சிங்கும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<END>>>>>>**